# தமிழ் இலக்கியங்களில்
## அறமும் அருளும்

தொகுதி 2
















பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்

தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"
(மதுரைக்காஞ்சி: 489-492)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை" (திருக்குறள் -76)




என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
தேசிய மீள்தர மதிப்பீட்டு "ஏ" தகுதி
ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் 9001 – 2015
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.

9789387009523

₹ 400/-

பிரபாக் பிரிண்ட் 0422 2646036

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ. மகாலட்சுமி<br>திருமதி சுகந்தி நாடார்<br>முனைவர் இலட்சுமி கார்மேகம் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை (அரசு உதவி)<br>என்.ஜி.எம் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVIII + 348 - 366 |
| விலை | : | உரூ. 400/- |

ISBN : 978 - 93 - 87009- 52 - 3

# Ethics and Devotion in Tamil Literature (International Conference)

| | | |
|---|---|---|
| Editors | : | Dr. A. Mahalakshmi<br>Miss. Suganthi Nadar<br>Dr. Lakshmi Karmegam |
| Copyrights | : | Editors |
| First Edition | : | January, 2019 |
| Published by | : | Department of Tamil<br>N.G.M. College<br>Pollachi - 642 001. |
| Computer | : | Prdag Print, Coimbatore - 29. |
| Printing at | : | Prdag Print<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVIII + 348 - 366 |
| Prize | : | Rs. 400/- |

# 81 கல்விவலார் கண்ட கலி உணர்த்தும் அறநெறிகள்

**மு. சரண்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*ந.க.ம கல்லூரி*
*பொள்ளாச்சி.*

பழந்தமிழரின் வாழ்வைத் தெள்ளிதின் உணர்த்தக்கூடிய சங்க இலக்கியங்கள், மனிதனைச் செம்மைப்படுத்தும் விதத்திலும் சங்கப் பாடல்களின் வழியாக அறநெறிகளைப் புகட்டுகின்றன. அதன்பொருட்டே, இன்றும் அவை நன்னடை புரிகின்றன.நீதி இலக்கியங்கள் எத்தகையதொரு அறநெறிகளை நல்குகின்றனவோ அதற்கு நிகராக, கலித்தொகையும் மனிதனுக்குத் தேவையான அறநெறிகளை நல்குகின்றன. பெரும்பாலும், கலித்தொகைப் பாடல்களில் புலவர்கள் "**மனிதன் அறநெறிகளோடு வாழவேண்டும் என்றும் அவ்வாறு வாழ்வானாயின் அவன் வாழ்வின் நற்பயனை அடைவான்**" என்னும் கருத்தை முன்வைக்கின்றனர். "**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**" என்பதை சிலம்பும் நினைவூட்டுகின்றது.

## அறம் - பொருள்

அறம் என்னும் சொல்லிற்கு "**ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம்**" என்ற எட்டு வகையான பொருள்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருகின்றன.மேலும், நல்ல பண்பை உணர்த்துவதும், "நீதி வழுவாத் தன்மை"யை குறிப்பிடும் சொல்லும் ஆகும். இன்ப வாழ்விற்கு ஏற்ற அன்பு, அருள், வாய்மை, உண்மை, நன்மை, பண்பு, அறிவு, செறிவு முதலான பண்புகளெல்லாம் அறம் வழிப்பட்டனவே.

அறம் என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடகவோ, சமயமாகவோ கருதவில்லை. அதனை, அவர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினர்(க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப.47). அறத்திற்கு ஐயன் வள்ளுவர்,பின்வருமாறு விளக்கம் தருகின்றார்.

> ***"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
> ***இழுக்கா இயன்றது அறம்."*** ***(குறள்-35)***

என்னும் குறளடியானது, பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடம்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறமாகும் என்பதை வலியுறுத்துகின்றது.

## இல்லறத்தில் அறம்

கணவன் மனைவி இருவரும் அகவாழ்வில் அறத்தொடு

பொருந்திய இல்லற வாழ்வினை மேற்கொண்டனர். ஓர் ஆடையை பகுத்து உடுத்து வாழும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழு ஒத்த அன்பு வாழ்க்கையே சிறந்த இல்லறம் ஆகும். எந்நிலையிலு கணவன், மனைவி இருவரும் ஒத்த கருத்துடன் வாழ்க்கை நடத்துத வேண்டும். அவ்வாறு நடத்தினால், அவ்வில்லறம் நல்லறமாகத் திகழு இத்தகைய அன்பு வாழ்க்கையை இல்லத்திலிருப்போர் கைக்கொண் வாழ வேண்டும் என்பதை.

***"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்***
***ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை."***
***(கலி,பாலை.18:வரி.10-11)***

இக்குறுங்கலி வரிகள் விளக்குகினறன.

## ஆட்சிமுறையில் அறம்

நாட்டு மக்களின் துயரங்களைப் போக்கியும், குற்றங்களை கடிந்து, நீதி நெறி வழுவாமல் ஆட்சி புரிவதே அரசனின் தலையா கடமை. இதுவே, அவரது செங்கோலினது ஆட்சி என்பதை,

***"அறந்துஞ்சுஞ் செங்கோல்"***

என புறநானூறும்

***"அறம்புரி செங்கோல் மன்னன்"***

என ஐங்குறுநூறும் பறைசாற்றுகின்றது.

செங்கோலின் பண்புகள் எல்லாம் அறம் என்று சங்கப் புலவர்க சிறப்பித்துள்ளனர்.சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக் அரசாட்சியின் இலக்கணங்களை எடுத்துக்கூறி அறிவுறுத்து வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர்,

***"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்***
***இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்***
***காவலர்ப் பழிக்கும் இக்கண்ணன் ஞாலம்"***
***(புறம்.35:வரி.2-4)***

என்று எச்சரிக்கின்றார்.

அரசனானவன் அறநெறிப்படி ஆட்சி புரிய வேண்டும். அவ்வா ஆட்சிபுரிய வில்லையெனில் மழை பெய்யாது, பொய்த்துப் போகு நாட்டின் வளம் குறையும். அதனுடன் அழிவும் உண்டாகும். இயற்கை நிகழ்வுகள் மாறும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்திருக்கிறத

## கற்பொழுக்கத்தில் அறம்

தலைவன் ஒருவனுடன் (காதல்) அன்பு கொண்டுள்ள தலைவி தங்களது கற்பு வாழ்க்கையை அறியாத அவளது பெற்றோ தலைவிக்கு வேறொரு ஆண்மகனுடன் மணம் பேசுகின்றனர். பெற்றோ பேசும் ஆண்மகனுடன் மணம் நிகழ்ந்தால் அது கற்பொழுக்கத்திற்கும் தலைவன் தலைவியரது களவொழுக்கத்தற்கும் மாறாக அமையு இதனை அறிந்த தோழி, தலைவன் தலைவியரது களவு வாழ்க்கை



(காதலை) நற்றாயிடம் (தாய்) முறைப்படி எடுத்துக் கூறுகின்றாள் அதாவது அறத்தொடு நிற்கின்றாள் என்பதை,

*"சிகுடியீரே! சிறுகுடியீரே!*
*வள்ளி கீழ் விழா: வரைமிசைத் தேன் கொடா:*
*கொல்லை குரல் வாங்கி ஈனா: மலைவாழ்நர்*
*அல்ல புரிந்த ஒழுகலினான்.*
*காந்தள் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்*
*வாங்கமை மென்தோள் குறவர் மடமகள்*
*தாம் பிழையார்: கேள்வர்த் தொழுது எழலால்:*
*தம்மையரும்*
*தாம் பிழையார் தாம் கொடுத்த கோல்:*
*என வாங்கு*
*அறத்தொடு நின்றேனைக் கண்டு, திறம்பட*
*என்னையர்க்கு உய்த்து உரைத்தான் யாய்"*
*(கலி,குறிஞ்சி.39:வரி.11-21)*

இப்பாடலின் வழியாக அறிய முடிகின்றது. மேலும், கற்பொழுக்கமும், தலைவியின் கற்பு நிலையும் இங்கு அறம் வழிப்பட்டதாகவே இருக்கின்றது.

## பொருள்வயிற் பிரிவில் அறம்

பொருள் தேடச் சென்ற கணவனின் வரவை எதிர் நோக்கியயிருக்கும் தலைவி,

*"அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்"*
*(கலி,பாலை.35)*

எனத் தொடங்கும் பாடல் தலைவி தோழியிடம் கூறுவதாக அமைகின்றது. நேர்மையான வழியில் பொருள் தேடுவதும் அப்பொருளினால் செய்யப்படும் கடமைகளைக் குறித்தும் தலைவி தோழியிடம் கூறுகிறாள் (நாடி வருவோர்க்கு உதவுதல்) இங்கு பிறருக்கு உதவுவதன் பொருட்டு தேடப்படும் பொருளே அறமெனக் கொள்ளப் படுகிறது.

## நிலையாமை அறம்

மண்ணுலகில் பிறந்தோர் அனைவரும் உணர வேண்டிய நிலையாமை அறத்தை ஒவ்வொருவரும் தன்னுள் நிறுத்தி அதன்படி வாழ வேண்டும். நிலையாமையை உணர்ந்தால், ஒவ்வொருவரது வாழ்க்கையும் நிலைபேறு உடையதாக அமைந்திடக் கூடும். ஒருவனது வாழ்நாள், அழகு, இளமை, ஈட்டிய பொருள் ஆகியன என்றும் நிலையில்லாதன என்பதை,

***"வளியினும் வரைநில்லாதது வாழுநாள் ஆகவே,***
***கடைநாள் இதுவென்று அறிந்தாரில்லை."***
***(கலி, பாலை. 20.9-10)***

என கலித்தொகை இயம்புகின்றது.

## ஈதல் அறம்

பிறர்க்கு ஈதல் (இரந்து வருவோர்க்கு) என்ற உயர்ந்த செயலை அறம் என்ற சொல்லில் சங்கப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளன கலித்தொகையிலும்

***"ஈதலில் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய"***
***(கலி-27:வரி. -)***

ஈதல் என்பது அறமே என எடுத்துரைக்கின்றார்.ஈதலின் சிறப்பாக "இரந்தோர்க்கு இல்லையென்பது ஈதலும்,பயன் கருதாது ஒருவருக்கு ஒரே பொருளைக் கொடுத்தலே ஈகை அறமாகும்" என்பதை,

***"ஆற்றுதல் என்பது அலர்ந்தவருக்கு உதவுதல்."***
***(கலித்.133:வரி.6)***

என்று நெய்தற் கலிப்பாடல் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

## நிறைவாக

சங்க இலக்கியங்கள் அறக் கருத்துக்களை வலியுறுத்துவதை போலவே, கலித்தொகையும் பல்வேறு அறக்கருத்துக்களை நல்குகின்றன. மனிதனின் வாழ்வை செம்மைபடுத்தும் நோக்கில் கலித்தொகையில் ஈதல், நிலையாமை, பொருள்வயிற் பிரிவு கற்பொழுக்கம், இல்லறம், ஆட்சிமுறை என யாவும் அறக் கருத்துக்களை எடுத்தியம்புகின்றன.